# ஆடற்கலை - தமிழகத்தின் தனிப்பெரும் கலை

டாக்டர் எஸ். ஏ. கே. துர்கா

ஆடற்கலை நம் தமிழகத்தில் மிகப் பழைய காலத்திலிருந்தே இருந்து வந்திருக்கிறது. முத்தமிழ் எனும் பிரிவு வேறெந்த மொழியிலும் காணப்பெறாத ஒரு தனிச் சிறப்பாகும். 'கூத்து எனும் சொல் 'ஆடல்' எனப் பொருள்படக் கூறப்பட்டு வந்தது. சங்க காலத்திலிருந்தே (கி மு. 500) நாம் பல்வேறு வகைக் கூத்தினைப் பற்றி விளக்கப்படுவதைக் காண்கிறோம்.

சிலப்பதிகாரம் என்னும் ஒப்புயர்வற்ற தமிழ்க் காப்பிய நூல் தமிழரின் இசை, ஆடல் வகையினைப் பற்றி மிகவும் விரிவாகவும் தெளிவாகவும் கூறுகிறது. ஆடல் எவ்வாறு சமூக, கலாசார ரீதியில் உயர்ந்த நிலையில் இருந்து வந்தது என்பதை மாதவியின் நாட்டிய நிகழ்ச்சியினை விவரிக்கும் அரங்கேற்று காதையிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

அகத்திய முனிவரே முதன் முதலில் நம் தமிழ் நாட்டில் ஆடலைப் பற்றி எழுதிய நூலாசிரியராவார். இந்நூல் சிலப்பதிகார காலத்திற்கும் 800-900 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனலாம். தொல்காப்பியத்தின் அகப்பொருள் எனும் பகுதியும் ஆடலைப் பற்றி விரிவாகக் கூறுகின்றது. ஆனால் இவை இந்திய வரலாற்றில் 'களப்பிரர்களின்' ஆட்சியில் கி. பி. 3 லிருந்து 5-வது நூற்றாண்டுவரை அழிந்துபடலாயிற்று. இவர்கள் இசையையும் நாட்டியத்தையும் மதத்தின் புனிதத் தன்மையை அழிப்பதாக எண்ணியதால் நம் முன்னோர்களின் பல தமிழ் இசை, நாட்டிய நூல்கள் மறைந்தன; மறைக்கப்பட்டன. சிலப்பதிகார நூல் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இது பரதரின் 'நாட்டிய சாஸ்திரம்' எனும் நூலுக்கு முற்பட்டதாகும். அடியார்க்கு நல்லார் என்னும் உரையாசிரியர் சிலப்பதிகார விளக்கத்தில் 100 வகைக் கூத்துக்களைப் பற்றிக் கூறுகிறார். (சிலப்பதிகாரம் உ. வே. சுவாமிநாத அய்யர் பதிப்பு—பக்கம் 88).

ஆடல் என்னும் கலை நம் தமிழ் நாட்டிலே தான் தோன்றியது என உறுதியாகக் கூறலாம். தமிழர் கடவுளை ஆடலரசனாகவும், கூத்தனாகவும் எண்ணி நடராஜர் என்னும் திருப்பெயர் சூட்டி. ஏழுவகைத் தாண்டவங்களை அவனுக்கு உருவகப்படுத்திக் கொடுத்து இப் புவி இயங்குவதற்கே அவன் ஆடல்தான் காரணம் எனப் போற்றி வழிபடுகின்றனர். இந்த நடராஜர் வழிபாடு நம் தமிழர்களுக்கே உரிய தனிச் சிறப்பாகும்.

பரதசேனாபதியம், பஞ்சமரபு முதலிய தமிழ் நூல்களிலேயே நாம் இன்று 'பரதநாட்டிய' வகையில் உபயோகிக்கப் பெறும் நிருத்த வகைகளையும் அபிநய ஹஸ்த வகைகளையும் காண்கிறோம். 'மஹாபரத சூடாமணி' என்னும் தமிழ் நூல் பரதநாட்டிய முத்திரைகளின் லட்சணங்களைப் பற்றி விமர்சிக்கிறது. 'முத்திரை' என்னும் சொல் பரதரின் நாட்டிய சாஸ்திரத்தில் காணப்படவில்லை சிலப்பதிகாரத்தின் உரையாசிரியரான அடியார்க்கு நல்லார் பரதம் என்னும் தமிழ் நூலைப் பற்றிக் குறிப்பிடுகிறார் (சிலப்பதிகாரம், உ. வே. சாமிநாதையர் பதிப்பு—பக்கம் 9) திரு மு. அருணாசலம் அவர்கள். 'An Introduction to the History of Tamil Literature' என்னும் நூலில் 'The Bharata Sastra and similar Sanskrit works, which are spoken of today, are but natural evolutions from the very ancient Tamil Dance and Drama Literature' (பக். 48) எனக் கூறுகிறார்.

சிலப்பதிகார உரைகளின் மூலமே நமக்கு பரதம், அகத்தியம், முறுவல், சயந்தம், குணநூல் செயிற்றியம் போன்ற தமிழ் பரதநூல்களைப் பற்றித் தெரிய வருகின்றது. 'பரதம்' என்னும் தமிழ்நூல் நம் தென்னிந்திய 'நாட்டிய' வகையினைப் பற்றி விளக்கி இருப்பதால், 'பரதநாட்டியம்' என்னும் பெயர் தென்னிந்திய நடனத்திற்கு ஏற்பட்டிருக்க வேண்டும்.

பரதமுனி என்பவரால் எழுதப் பெற்றிருக்கும் 'நாட்டிய சாஸ்திரம்' என்னும் ஸம்ஸ்கிருத நூலுக்கு கி. பி. 2-ம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 5-ம் நூற்றாண்டு வரை காலம் மதிப்பிடப்படுகிறது. ஆனால் வாரணாசி அறிஞர் இந்துசேகர் அவர்கள் தம் நூலில் நாட்டிய சாஸ்திரத்தைப் பற்றிய

குறிப்பு எந்த ஒரு சமஸ்கிருத நூலிலும் 7-வது நூற்றாண்டுக்கு முன் இல்லையாதலால் இந்நூல் ஏழாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது என்கிறார். (Sanskrit Drama & its origin Pages 43-44) அதிலும் பரதரின் நாட்டிய சாஸ்திரம் என்னும் நூல் பலரால் எழுதப்பட்டு, பல பகுதிகள் சேர்க்கப்பட்டுத் தொகுக்கப்பட்ட நூல் என்றும் கூறப்படுகிறது.

சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் நாட்டியக் கலை விளக்கப்படுகிறது. பரத நாட்டியம் எனத் தற்போது விளங்கி வரும் நாட்டிய வகை தென்னாட்டில் நிலவி வரும் பழம் பெரும் ஆட்டக் கலையே யாகும். ஆட்டத்தைப் பேசும் மொழியால் அதாவது கொச்சையாகத் தமிழ் நாட்டில் 'சதிர்' எனவும், 'சின்னமேளம்' எனவும் அழைத்தனர். மைசூர் போன்ற இடங்களில் இந்தத் தென்னாட்டு வகை நடனத்தை 'பரத நாட்டியம்' என்றுதான் அழைத்து வந்தனர். தமிழில் 'பரதம்' என்னும் சொல்லையும், 'பரத நாட்டியம்' எனப்பொருள் பட உபயோகித்தார்கள். மாதவி ஆடிய கூத்து பரதநாட்டிய வ்கையைச் சார்ந்ததாகும் என டாக்டர் வே. ராகவன் அவர்கள் நாட்டியக் கலை என்னும் நூலில் பக்கம் 36, 37-ல் குறிப்பிட்டுள்ளார். பரத நாட்டியத்தைப் பற்றி விளக்கிய பின், 'பண்டைத் தமிழ் நூல்களில் மாதவி போன்றவர் ஆடிய கூத்து இதுவே' எனக் கூறுகிறார். பரதரின் நாட்டிய சாஸ்திரத்திற்கு முன்னரே பரதநாட்டியத்தில் உபயோகிக்கப் பெறும் நான்கு வகை அபிநயங்களைப் பற்றிச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. பரதரின் நாட்டிய சாஸ்திர காலத்திற்கு முன் நம் தென்னாட்டில் நாட்டிய வகை நிலவி வந்தது நாட்டிய சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளாதகப் பேராசிரியர் சாம்பமூர்த்தி தமிழில் மொழி பெயர்த்து, 'பரதக்கலைச் சித்திரம்' என்னும் நூலில் பின்வருமாறு கூறுகிறார் :—

"தென்னிந்திய மக்கள் பற்பல நடனங்களிலும், வாய்ப்பாட்டிலும் வாத்திய சங்கீதத்திலும் விசேஷ ஆர்வம் காட்டுகிறார்கள். அவர்களது கலைகளில் அழகும் மதுரமும் முக்கிய அம்சங்களாக விளங்குகின்றன. அவர்களின் சாமர்த்தியமான அங்க அபிநயங்கள் மெருகுடன் பிரகாசிக்கின்றன. அப்படி லலித கலைகள் உலாவும் நாடானது வடக்கே விந்திய பர்வதத்தாலும் ஏனைய மூன்று திக்குகளில் சமுத்திரத்தாலும் சூழப்பட்டுள்ளது."

பரத நாட்டியத்தின் தோற்றம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்து கணக்கிடலாம். தென்னகத்தில் பரதரின் நாட்டிய சாஸ்திர நூலுக்கு முன்னரே நாட்டியம் பெருமை வாய்ந்த முறையில் இருந்தது என்பதற்கு அத்தாட்சியாக நாட்டிய சாஸ்திரத்தில் கூறப்பெற்றிருக்கும் பின் கண்ட வரிகள் அமைந்துள்ளன :—

'தத்ர தாக்ஷிநாட்யாச் தாவத் பஹூநிருத்த கீதவாத்யா : கைசிகிபிராயாம் சதுர்மாதுர லலிதாங்கா பிநயாச்ச". NATYASASTRA—CHAP-III - VOL - II G. O. S. BARODA 1934 - P 207.

தமிழ் அறிஞரான காரைக்குடி சா. கணேசன் அவர்கள் 'சதிர்' என்னும் சொல் பரதநாட்டியத்தை குறிப்பதற்கு உபயோகிக்கப் பட்டதின் காரணத்தைப் பின் வருமாறு கூறுகிறார் :— (பரதகலைச் சித்திரம்).

'சதி' என்ற சொல் பழம் நூல்களில் காணப்படுகிறது. இச்சொல்லே 'ஜதி' 'யதி' என்றெல்லாம் மாறிப் பிறமொழி நூல்களில் குறிக்கப்படுகின்றது. இதையே பிற்காலத் தமிழர்கள் 'சதிர்' என்று வழங்கலாயினர்'.

'சதிர்' என்னும் சொல் உருது மொழியிலிருந்து உருவாயிற்று எனப் பேராசிரியர் ஆர். சத்யநாராயணா தன்னுடைய "Bharathanatya - A Critical study") என்னும் நூலில் கூறுகிறார். (பக்கம் 241 - 'சதிர்' என்னும் சொல்லும் 'நாட்ச்' 'டாபே' என்னும் சொற்களும், நாட்டியத்தைத் தொழிலாக ஆடும் நடனமாதர்கள் பொழுது போக்கிற்காகவும், திருமணம் போன்ற விழாக் காலங்களிலும் ஆடும் நாட்டிய வகையைக் குறிக்கும் சொற்களாகும் என்று கூறுகிறார்.) அவரது குறிப்பு வருமாறு :—

"In this connection, another erroneous view expressed sometimes even by scholars may be refuted. It is held that Bharatanatya is the refined term given to what used to be called 'Sadir' or 'Nautch' in urudu, Dasiattam in Tamil and 'Tape' in Kannada. These terms refer to any and every kind of dance performed by professional dancing girls for pure entertainment or marriage and other celebrations."

இந்தச் 'சதிர்' என்னும் சொல் தமிழ்நாட்டில் மட்டுமே பரதநாட்டியத்தைக் குறிக்க உபயோகிக்கப்பட்டது. மைசூர் மாநிலத்தில் சுமார் 400 வருடங்களாகப் 'பரதநாட்டியம்' என்னும் சொல்தான் சாஸ்திரீய தென்னிந்திய நடன வகைக்கு உபயோகிக்கப்பட்டு வந்திருக்கிறது. முதன் முதலில் 'பரதநாட்டியம்' என்னும் சொல்லை ஒரு பாடலில் உபயோகித்திருப்பவர் சங்கீத பிதாமகர் என்று போற்றப்படும் ஸ்ரீ புரந்தர தாசர் அவர்கள்.

'ஆடிதனோ ரங்க அத்புததின்தலி !
காலிங்கன பணியலி ஆடிதனோ !
ரம்பே உர்வசி ரமணியரேஉரு,
சேந்ததி பரதநாட்யவ நடிஸே !

[Ref : Bengeri, Hecca Rao-and Krishnasarma Belagiri (Eds.) Krishna leela Vol. IV song 87.]

என்று பாடுகிறார் புரந்தரதாசர். இதிலிருந்து பரத நாட்டியம் என்ற சொல் அண்மைக் காலத்தில் தோன்றியதல்ல என்பது தெளிவாகிறது.

பரதம் என்னும் சொல் நடனமாடுபவர் அல்லது நடிகர் என்னும் பொருள்பட பரதரின் நாட்டிய சாஸ்திரத்திற்கு முன்னரே யக்ஞவல்க்யர் ஸ்ம்ருதியில் காணப்படுகிறது. பரதவாக்யம் என்னும் சொல் ஸம்ஸ்க்ருத நாடகங்கள் அனைத்திலும் காணப்படுகிறது. ஆகையால் பரதநாட்டியம் என்னும் சொல் பரதரின் நாட்டியத்தைப் பின்பற்றியது என்று மட்டும் பொருள்பட உபயோகிக்கப் பட்டதாகக் கூறமுடியாது.

பரதரின் நாட்டிய சாஸ்திரம் என்னும் நூலுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே தென்னிந்தியாவில் நாட்டியத்தைப் பற்றி விளக்கிக் கூறியிருப்பதால் பரதரின் நாட்டிய சாஸ்திரத்திற்குப் பிறகு அல்லது அதைப் பின்பற்றி நம் தமிழகத்தில் நாட்டியம் உருவானதாகக் கூறமுடியாது. இங்குள்ள நாட்டிய வகைகளை பரதர் நாட்டிய சாஸ்திரம் என்னும் நூலில் விரிவாக வகைப்படுத்தி எழுதியிருக்கக் கூடும் அக்காலத்தில் பிராந்திய இசை, நடன வகைகள் ஏராளமானதாக இருந்ததால் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் நாட்டிய வகைகளைத் தொகுத்து பரதர் நாட்டிய சாஸ்திரத்தில் கூறியிருக்கலாம். அதனாலேயே தமிழகத்தில் உள்ள பரத நாட்டியவகையில் பயன்படும் கரணங்கள், மற்றும் ஒடிஸ்ஸி, குச்சிப்புடி, கதகளி, மணிபுரி, கதக் ஆகிய நடனங்களில் காணப் பெறும் கரணங்கள் அனைத்தும் நாட்டிய சாஸ்திர நூலில் காணப்படுகின்றன. எனவே பரதரின் நாட்டிய சாஸ்திரம் இந்தியா முழுவதும் ஆங்காங்குள்ள பிராந்தியங்களில் வழக்கத்தில் இருந்த நாட்டிய முறைகளில் கையாளப்பட்டு வந்த நாட்டியத்தின் லட்சணங்களைத் தொகுத்துக் கூறும் தொகுப்பு நூலே (Compendium) தவிர, பரதரின் நாட்டிய சாஸ்திர நூலை அடிப்படையாகக் கொண்டுதான் நடனங்கள் ஒவ்வொரு பகுதியிலும் தோன்றியிருக்கும் என்று கூறமுடியாது, எந்த ஒரு இலக்கண நூலும் இலட்சியத்தில் அதாவது நடைமுறையில் உள்ளவற்றை மட்டுமே பதிவு செய்ய முடியுமே தவிர ஒரு நூலில் எழுதிய பிறகு அதை ஆதாரமாகக் கொண்டு நடைமுறையில் கொண்டு வருவதற்கு முயற்சிகள் செய்வதில்லை. இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் அமைவதுதான் வழக்கம். 'லக்ஷ்ய ; பரதானம் கலு சாஸ்திரம் :

பரதரின் நாட்டிய சாஸ்திரம் ஒரு நாடக இலக்கண நூலாகும். அதில் ரூபகம் என்னும் சொல்லை நாடகம் என்னும் பொருள்பட உபயோகித்து 10 விதமான நாடக வகைகளைப் பற்றியும், நாடகத்தில் இசை-நடனம் ஆகியவை ஒன்றி இருப்பதால் இசையைப் பற்றியும் நடனத்தில் உபயோகிக்கப்படும் நிருத்ய நிருத்த வகைகளைப் பற்றியும் கூறப்படுகிறது. பரதருக்குப் பின் கோஹலர் முதல் பலர் 'கேயரூபகம்', 'நிருத்தியபேதம்', 'உபரூபகம்' என்று பல பெயர்களைச் சூட்டி நடனத்தின் வகைகளைப்பற்றிக் கூறுகின்றனர். நாட்டியம் என்னும் சொல்லை நாடகம் என்பதைக் குறிக்கும் சொல்லாகவே பரதர் பயன்படுத்தியிருக்கிறார்.

பதினைந்தாம் நூற்றாண்டு முதல் நாட்டியம் என்னும் சொல்லை ஆடல் என்னும் பொருள்பட உபயோகிக்கத் தொடங்கினர் எனக் கூறலாம். அமரசிம்ஹர் தன்னுடைய கலைக் களஞ்சியத்தில் நாட்டியம், நர்த்தனம், தாண்டவம், லாஸ்யம், நிருத்யம், நடனம் ஆகிய சொற்கள் அனைத்தும் ஒரே அர்த்தமுள்ளவை (Synonyms) எனக் கூறுகிறார்.

'நாட்டியா' என்னும் பெயர்ச்சொல் 'பரத என்னும் பெயர் உரிச்சொல்லைத் தாங்கி நிற்கிறது.

நட் என்னும் சொல் 'to dance, to mime to, imitate, to dramatise' ஆகியவைகளை உணர்த்தும் என பாணியின் தாது பாடம் என்னும் நூலில் காணப்படுகிறது. 'பரத' என்னும் சமஸ்கிருதச் சொல் 'ப்ரி' என்னும் சொல்லில் இருந்து பிறந்தது எனவும் அதன் பொருள் 'உணர்த்துவது, அனுபவிப்பது' போன்றவைகளைக் குறிக்கும் '"to maintain, to-carry, to convey, to experience etc...") எனவும் பாணினியின் தாதுபாடம் கூறுகிறது. 'பரத' என்னும் சொல் சம்ஸ்க்ருதத்தில் 'பாரம் தனோதி' எனவும் 'பிபர்தி ஸ்வாங்கம்' எனவும் விவரிக்கப்படுகிறது. அதாவது 'Bharata' may be understood to mean an extension propagation, augmentation or conveyance of any aesthetic experience in general or of song in particular" (Bharatanatya - a critical study—by Prof. R. Satyanarayana-Page 11)

'பரதம்' என்ற மிகப் பழைய தமிழ் நூலினை ஆதாரமாகக் கொண்ட 'பரதநாட்டியம்' மிகவும் தெய்வீகமான கலையாகும். 'சிருங்கார உருப்படி வகைகள் மதுர பக்தி வகையைச் சார்ந்தவைகளேயாகும். மதுரபக்தியை நம் சாஸ்திரங்கள் பக்தி வகைகளுள் மிகவும் உயர்ந்தது—'உத்தமோத்தம்:, எனக் கூறுகின்றன. அபிநய பதங்களை நடனமாடுபவர்கள் ஆடும்பொழுது உயர்ந்த கருத்தினையே தெரிவிக்கின்றனர். எந்த ஒரு தலைமுறையினரும் பரத நாட்டியக் கலையை இழிவுபடுத்தும் முறையில் நடந்து கொள்ளவில்லை. கலையினாலேதான் கலைஞர்களுக்கு மதிப்பை அளிக்கக் கூடும். பரதநாட்டியத்தின் உயரிய தன்மையை உணர்ந்தே பலரும் இந்தக் கலையை ஆட ஆரம்பித்தனர். தமிழகத்தின் தனிப்பெரும் கலையான பரத நாட்டியக் கலையின் மரபு மாறாமலும் தரம் குறையாமலும் போற்றி வளர்க்க இன்றைய இளந்தலைமுறையினர் முயற்சி செய்ய வேண்டும்.

---


*With the best compliments from*

Phone : 812501, 87013 Cable : ANTIQARTS

**N. BALAKRISHNAN & CO.**

Manufacturers, Wholesalers and Exporters

Indian Handicrafts, Antique Wood Carvings
Brassware, Bronze Figures, Paintings
Stone Figures & Carved Doors & Furnitures

*Wholesale Show Room & Mailing Address :*

62, Montieth Lane, Egmore,
MADRAS - 600 008